# கிறிஸ்தவ அரசியல்

செ.சுஜித்

Publisher
TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY

# CHRISTHAVA ARASIYAL
in Tamil

Tinnevelly Christian Historical Society

**Author**
**Mr. S. Sujith** B.Com., M.S.W., B.D.,

**Published by:**
TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY
# 2.2.3(4), North Street,
Bungalow Surandai-627859
Tenkasi district (Tirunelveli)
04633-290401, +91 91767 80001,+91 75388 12218
Email : christianhistorical@gmail.com

**Edition:**
First -2023

**ISBN:**

**Donation:**

**Design & Printing :**
TCHS Press

**Website :**
christianhistoricalsociety.in
tchsportal.co.in

# CHRISTHAVA ARASIYAL

## A Christian's Response to Politics

**By**

**Mr. S. Sujith**

B.Com., M.S.W., B. D.,

**Published & Copyright**

BY

TINNEVELLY CHRISTIAN HISTORICAL SOCIETY

**திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம்**
பதிப்பகம்

# பதிப்பாசிரியர் உரை

கர்த்தர் இஸ்ரவேல் மக்களை வனாந்திர வழியாய் வழி நடத்தி செல்லும்போது பூர்வநாட்களை நினை; தலைமுறை தலைமுறையாய்ச் சென்ற வருஷங்களைக் கவனித்துப்பார் என்று உரைக்கிறார். அதுபோல நம் வரலாற்றின் பக்கங்களை நாம் திரும்பி பார்க்கும் போது, அநேக படிப்பினைகளையும், பாடங்களையும் அவை நமக்கு கற்றுக்கொடுப்பது மட்டுமல்லாமல், தேவனானவர் எவ்வாறு கிறிஸ் தவர்களாகிய நம்மை வரலாற்றின் பக்கங்களில் நடத்தி வந்திருக்கிறார் என்பதை அறிய முடியும்.

சரியான பாதை எதுவென தெரியாத நிலையில் நாம் இருக்கும் போது, வரலாற்றுச் சம்பவங்கள் நமக்கான பாதைகளை சாட்சிகளாக நமக்கு காட்டுகின்றன. இத்தகைய வரலாறுகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவன் நமக்களித்த வரலாற்று அறிஞர்கள் மூலமாய் அதிக தியாகத்தோடும் அர்ப்பணிப்போடும் அடுத்த தலைமுறைக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாகவும், பொக்கிஷமாகவும் கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வரிய செல்வத்தை நமக்கு மட்டுமல்லாமல், நம் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வது நம் மேல் விழுந்த தலையாய கடமையாகும். அந்த அளப்பரிய பணியை செய்ய அர்ப்பணிக்கப்பட்ட இயக்கங்களுள் கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கமும் ஒன்று.

இந்நூலை ஆக்கியோன் இறையியல் ஊழியரான திரு.S.சுஜித் அவர்கள் பெத்தேல் இறையியல் கல்லூரியில் 2022 ஆம் ஆண்டு இறையியல் (B.D) படிப்பையும் பயின்றுள்ளார். தென்னிந்திய திருச்சபை திருநெல்வேலி திருமண்டலத்தில் 2022 ஆம் ஆண்டு முதல் உபதேசியாகவும் ஊழியம் செய்து வருகின்றார். திருச்சபை வரலாற்றுப் பணிகளிலும், கள ஆய்வுப் பணிகளிலும், வரலாற்றுச் சங்க மாத இதழிலும் கட்டுரைகளை எழுதி வருகின்றார். இந்நூல் அவர் எழுதிய இந்த நூல் ''**கிறிஸ்துவ அரசியல்**'' நூலை படிக்கின்ற ஒவ்வொருவருக்கும் அரசியலில் தங்களின் பங்களிப்பை பற்றியும்,

இயேசு கிறிஸ்து, ஆதி திருச்சபையின் அரசியல் சூழ்நிலைகளைப் பற்றியும், நீதி, நேர்மை பற்றிய கிறிஸ்தவ எண்ணங்களையும் பிரதிபலிக்கின்றது.

சுஜித் எழுதியுள்ள இந்த ''**கிறிஸ்துவ அரசியல்**'' நூலுக்காக பராபரனுக்கு நன்றி செலுத்துகின்றேன். இந்நூலை வடிவமைத்து வெளியிட வரலாற்றுச் சங்கத்திற்கு உரிமை வழங்கிய நூலாசிரியருக்கு அவர்களுக்கு கிறிஸ்தவ வரலாற்றுச் சங்கம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

**செ. சுஜித்**
ஆசிரியர்

# முன்னுரை

## ''அறமும், ஆன்மீகமும் ஒன்று''

அரசியல், ஆட்சி, கட்சி என்றாலே பல கிறிஸ்தவ மக்களுக்கு பாவம் என்ற எண்ணமும், கிறிஸ்தவத்திற்கும் அதற்கும் ஏது சமந்தம் என்ற சிந்தனையும் தோன்றி விடுகிறது.கிறிஸ்துவானவரை உலகத்தின் அனைத்து காரியத்திற்கும் பொதுவாக வைத்து காணாமல் அவரை வெறும் ஆன்மீகத்திற்கும், தனி ஆத்துமத்திற்கும் மட்டுமே தேவன் என்ற நிலையை நாம் இக்கால கிறிஸ்தவத்தில் காணலாம். இதற்கு காரணம் கிறிஸ்தவத்தில் அரசியலின் தேவையும், இன்றியமையாததையும் கிறிஸ்தவ மக்கள் புரிந்து கொள்ளாமல் இறை வேதத்தை புரிந்துகொண்டதே. ஆண்டவர் இயேசு கிறிஸ் து இந்த உலகத்தில் மனிதனாக பிறந்த நாள் முதற்கொண்டு அவர் பரமேறின நாள் வரை தனது கொள்கைகளையும், சித்தாந்தங்களையும் தன்னுடைய ஆட்சி, ஆளுகை பற்றிய பல குறிப்புகளை தன்னுடைய போதனை ஊழியத்தின் மூலமும், வெளிப்படியான கண்டனங்கள் மூ லமும் வெளிபடுத்தி உள்ளதை நாம் சுவிஷேசங்களில் வாசிக்கலாம். இறைமகன் இயேசு கிறிஸ்து நூறு சதவிகிதம் தேவன் நூறு சதவிகிதம் மனிதன் என்றே வேதமும், நம்முடைய திருச்சபை வேத சித்தாந்தங்களும் கற்பிக்கிறது. அப்படியிருக்க மனிதனாக இருக்கும் ஒவ்வொருவனும் அரசியலையும், புற ஆளுகை முறைகளும் மேற்கொள்ள வேண்டியது இருக்கும். இயேசு கிறிஸ்துவும், கிறிஸ் தவர்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

கிறிஸ்துவின் வாழ்வில் ஒவ்வொரு அங்கத்திலும் அரசியல் உள்ளது. கொள்கைகள் உள்ளது. ஆன்மீக, ஆத்மீக காரியங்கள் இருப்பது போலவே, இவ்வுலகத்தில் வாழும் வழிமுறைகளும் உள்ளது. அதை கிறிஸ்துவை பின்பற்றும் நாம் அனைவரும் அறிந்து வைத்திருப்பதும், அதை வாழ்வின் அறமாக ஏற்று வாழ்வதும்

கடமை. கிறிஸ்தவ அரசியல் எனும் இந்த சிறு நூலின் மூலம் நான் அறிந்த, தெரிந்த, புரிந்த சில கிறிஸ்தவ அரசியல், இறையியல், அறங்களை வெளி கொண்டுவர முயற்சி செய்திருக்கிறேன். கிறிஸ் துவை பின்பற்றும் நாமும் பரமன் காட்டும் அரசியல் அறங்களில் பயணித்து சமூக, சமுதாய, பொருளாதார முற்போக்குவாதங்களை பின்பற்றுவோமானால் நிச்சயமாக **பிற மக்களுக்கு நாம் ஒவ்வொருவரும் வாழும் கிறிஸ்துவாக அறியப்படுவோம்** என்பது இறைவாக்கு. இதை வாசிக்கும் ஒவ்வொருவரையும் தூய ஆவியானவர் வழிநடத்துவாராக.

பரமனின் பாதையில்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆண்டவரின் அரசியல் | 15 |
| 2. | ஆதித்திருச்சபையும் அரசியலும் | 17 |
| 3. | அரசியலின் அவசியம் | 19 |
| 4. | கிறிஸ்தவர்களின் சேவை | 22 |
| 5. | கிறிஸ்தவ அரசியல் | 24 |
| 6. | கிறிஸ்தவ கொள்கை | 28 |
| 7. | அரசியலில் நற்சாட்சி | 33 |
| 8. | அரசியல் எதிர்காலம் | 36 |

அத்தியாயம் 1

# ஆண்டவரின் அரசியல்

## இதோ, தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறது

கிறிஸ்தவர்களில் பலர் இயேசு கிறிஸ்துவை ஒரு ஆன்மீக தலைவராக மட்டுமே எடுத்து கொள்கின்றனர். அவருக்கும் அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் பங்கும், தொடர்பும் இல்லை என்று கூறுகின்றனர். சுவிஷேசங்களை ஆழமாக வாசிக்கும் போது அரசியலுக்கும் ஆண்டவருக்கும் இடையே உள்ள தொடர்பு எவ்வளவு வலியது என்பதை அறியலாம். அரசியலில் ஆண்டவருக்கு பங்கு இல்லை என்று கிறிஸ்தவர்கள் சிலர் பரப்பி விடும் தவறாக கொள்கையால் விளைந்த தீமை என்னவென்றால், கிறிஸ்தவர்கள் அனைவரும் அரசியல், பொருளாதார உலகிலிருந்து ஒதுங்கி கொள்வதே நலம் என்றும், அவர்கள் ஆவிக்குரிய விஷயங்கள் மற்றும் ஆன்மீக விசயங்கள் மட்டுமே பொருத்தமான வாழ்க்கை, வழி என்று புரிந்து கொள்ளுகிறார்கள். சமுதாயத்தில், சமுகத்தில் நடைபெறும் புறவாழ்வு சமந்தமான காரியங்கள் கிறிஸ்தவர்களுக்கும், கிரிஸ்தவற்றிற்கும் தேவையற்றது என்று சொல்லுவது எத்தனை மடமையானது. கிறிஸ்துவானவர் அரசியலில் இருந்து விலகி வெறும் ஆன்மீக காரியங்களில் மட்டுமே தன்னுடைய வாழ்வையும், ஊழியத்தையும் செய்திருப்பாறேன்றால் அவர் சிலுவை மரணத்தை அடைந்திருக்க தேவையே இருந்திருக்காது. அந்தகாலத்தில் அங்கிருந்த அரசியலில் நச்சு மரமாய் வேரூன்றி தழைத்து வளந்திருந்த தீமைகளையும், ஊழல்களையும் களைய முற்பட்டதின் பரிசாக தான் அவர் மீது கொலை குற்றம் சுமத்தப்பட்டது. சமுதாயத்தில் தாம் கண்ட தவறுகளை அஞ்சாநெஞ்சுடன் ஆணித்தரமாக எடுத்து கூறியதால் சிலுவையில் அறியப்பட வேண்டும் என்று அவர் தீர்க்கப்பட்டார்.

அரசியலில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஏற்றுகொண்ட முறை அவரை சிலுவை மரணத்திற்கு கொண்டுசென்றது. இதை

இன்னும் தெளிவுபடுத்த வேண்டும் என்றால், நம் ஆண்டவரை கல்வாரி சிலுவை மரத்திற்கு அழைத்து சென்றவர்கள் யார்? பரிசேயரா? சதுசேயரா? ஏரோதியரா? இல்லை வேதபாதகரா? என்று பார்த்தால் இவர்கள் அனைவருமே அடங்குவர். யார் இவர்கள் என்பதை ஆராய்ந்து பார்த்தால் பரிசேயர்கள் என்பவர்கள் யூத மக்கள் அந்நிய தேவர்களுக்கு அடிமைப்பட்டு போகாமல் மோசேயின் நியாயபிரமாணத்தை பிசகாமல் காத்து வந்தவர்கள். ஆனால் அவர்களிடத்தில் அறம் இல்லை, அன்பு இல்லை. நீதியும் நியாயத்தையும் பேசும் அவர்கள், அன்பையும் விலை பேசினார்கள். சதுசேயர்கள் என்பவர்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற இடத்தை சமுதாயத்தில் பெற்றிருந்தனர். ஆசாரியர்கள். ஆலய பொறுப்பில் உள்ளவர்கள். கடமைகளில் தவறாத இவர்களின் இதயத்தில் கனிவுக்கும், கருணைக்கும் இடமில்லை. இவர்கள் யூதேயா நாட்டில் தங்களின் அரசியலை நிகழ்த்திக்கொண்டிருந்தனர். ஆட்சி பொறுப்பை கையில் வைத்து கொண்டு அதிகார போதையில் தாங்கள் நினைத்தவற்றை செய்துகொண்டிருந்தனர். இதை அனைத்தையும் கண்ட நம் ஆண்டவர் அவர்களின் அதிகாரத்திற்கும், பெருவாரியான அரசியல் செல்வாக்குக்கும் தலை வணங்கவில்லை. தலைவர்கள் முன்பு துதிப்பாடல்கள் பாடவில்லை. அனால் கண்டங்கள் முக்கியமாக ஆட்சியில் இருக்கும் பெரும் தலைவர்களுக்கும், அரசியல் செய்பவர்களுக்கும் எதிராக பெரும் கண்டங்களை பேசுகிறார். ஏன் நம் ஆண்டவர் இவ்வாறு பேசுகிறார் என்று பார்த்தால், தலைவர்கள மக்களை ஆன்மீக காரியத்தில் மட்டுமால்லாது, அரசியல், பொருளாதார சமுக விஷயங்கள் அனைத்திலும் மக்களை தவறான பாதைக்கு அழைத்து சென்றதே !! அதனால் தான் அவர்களை தேவன் **குருடரான வழிகாட்டிகள்** என்று கண்டனங்களை பதிவு செய்கிறார்.

அரசியல்வாதிகளை கண்டிப்பதோடு அவர் அவரது அரசியல் பங்கெடுப்பை விடவில்லை. ஏழைகளின் அன்பராக, சமுகத்தில் தாழ்த்தப்பட்ட, நசுக்கப்பட்ட, விளிம்பில் நின்று கொண்டிருந்த மக்களோடு நின்றார். ஆட்சி அதிகாரத்தோடு பெருமையுடன் உலாவி கொண்ருந்த அரசியல் மக்களோடு அவர் இல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களோடு, உழைக்கும் பாமர மக்களோடு தோள் கொடுத்து நின்றார். ஆணையாளர்களால் நெருக்கபட்டவர்களுக்கு பரிவு காட்டினார். தாழ்த்தப்பட்டவர்களுக்காக பரிந்து பேசினார். ஒடுக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு தந்தார்.

இயேசு கிறிஸ்து காட்டிய கண்டனங்களை கண்ட அரசியல் மக்கள், நம் ஆண்டவரின் இந்த அரசியல், அன்பு அவர்களுக்கு

பயத்தையும், ஆண்டவருக்கு எதிராக அவர்களை தூண்டி விடவும் செய்தன. நம் ஆண்டவர் வெளிப்படையாக அவர்களுக்கு விதிக்கும் கண்டனங்கள் அவர்களின் அரசியல் வாழ்க்கையின் செல்வாக்கை குறைத்துவிடும் என்று எண்ணினர். தேவ ஆட்டுக்குட்டியின் உயிர் பலி கொண்டால் மட்டுமே தங்களின் உயிர் வாழும் என்று எண்ணினார்.

ஆண்டவரின் அரசியல் கொள்கைகள் பெரும்பாலும் சீர்திருத்த எண்ணம் உடையதாக இருந்தது. அவரின் ஊழியத்தில் அரசியல், ஆன்மீக சீர்திருத்தம் மட்டுமல்லாது, பொருளாதாரம், சமூக சீர்திருத்த சித்தந்தங்களும் அடங்கியிருந்தது. சமூகத்தில் மக்களோடு கலந்து அவர்களுடைய நலன்களிலும், இடர்களிலும் பங்கு கொண்டவராக இருந்தார்.

இப்படி தனது மக்களின் நலனுக்காக ஆக்கமும் ஊக்கமும் ஆர்வமும் கொண்டிருந்த நம் ஆண்டவரை சமூகத்தின் யதார்த்தத்தை விட்டு விலக்கி, தனி மனிதனாக மாற்றி, அவர் மனிதனின் ஆன்மிக, ஆத்தும வாழ்வை பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருந்தார் என்று சொல்லுவது எவ்வளவு முரண்பாடு உடைய கருத்து.

ஆனால் நம் ஆண்டவர் தன் மக்கள் மீது அன்பு கொண்டு அரசியலில் சமூக, பொருளாதார முற்போக்கு கோட்பாடுகளை வழிமொழிந்தார் என்று சொல்லும் போது தேவன் தன்னலமாக அரசியல் செய்தார், அரசியலில் இருக்கும் சதி ஆலோசனைகளும் ஈடுபட்டார் என்று எண்ணக்கூடாது. நம் ஆண்டவரின் தன்னலமில்லாத பொது கொள்கைகளை வேதம் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கிறது. இயேசு கிறிஸ்துவின் உபவாசம் முடியும் போது பிசாசானவன் வந்து உலகத்தின் அனைத்தையும் அவருக்கு கொடுக்கிறேன் என்று சொல்லும் போது ஆண்டவர் **அப்பாலே போ சாத்தானே** என்று வன்மையாக சாடியிருப்பது ஆண்டவரின் முற்போக்கான எண்ண ஓட்டங்களை எடுத்துரைக்கிறது. **அரசியல், ஆட்சி என்பதெல்லாம் அதிகாரத்திற்கு வருவதற்கு இல்லை, அது மக்களின் நலன், செயல்பாடுகளை சீர்திருத்துவதற்கே** என்ற ஆண்டவரின் கொள்கைகள் கிறிஸ்தவர்களாகிய நமக்கு அரசியலின் முக்கியத்துவத்தையும், இன்றியமையாததையும் எடுத்துரைக்கிறது.

இயேசு கிறிஸ்து தமது போதனை ஊழியத்தை ஆரம்பிக்கும்பொழுது தேவனுடைய ராஜ்ஜியம் சமீபமாயிற்று என்று அறிவித்தார். அவ்வித ராஜ்ஜியத்தின் அடையாளங்களை குறிப்பிடும்போது “**குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள். தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது**” என்று கூறினார். தேவனின்

ஆளுகை அல்லது தேவனுடைய இராஜ்யம் இவ்வுலகில் தோன்றி வளரும்படியாக வந்த அவர் தம்முடைய ஊழியத்திலும் மக்களின் ஆத்தும நன்மை வேறென்றும், சரீர நன்மை வேறென்றும், பரம இலட்சியங்கள் வேறென்றும் இவ்வுலக வாழ்க்கையின் இலட்சியங்கள் வேறென்றும் பிரித்து ஆத்தும காரியங்களில் மட்டுமே தமது நேரத்தையும், வல்லமையையும் உபயோகிக்க வேண்டுமென்று எண்ணவில்லை. ஆனால், தேவனின் ஆளுகை சரீர வாழ்க்கையையும், இவ்வுலக வாழ்க்கையின் பிரச்சனைகளையும் ஊடுருவிச் செல்லும் ஒரு ஆதிக்கம் என்பதைக் காட்டும் முறையில், மக்கள் பாவச்சிறையினின்று மீட்கப்படும்படியாக அவர் ஆற்றிய பணி அவர்களுக்குச் சரீர பிரச்சனைகளில் இருந்தும் விடுதலையளிக்கும் பணியாகவும் இயங்கிற்று. தேவனின் அன்பையும் பராமரிப்பையும் நற்செய்தியாக அறிவிப்பதும், வியாதிப்பட்டோரையும், மாற்று திறனாளிகளை சுகப்படுத்துவதும் அவருக்கு ஒரே பணியாகவே இருந்தது.

இயேசு கிறிஸ்து அரசியல் சமுதாயப் பிரச்சனைகளைக் குறித்துத் திட்டவட்டமாகக் கட்டளைகள் கொடுக்கவில்லை. குடியரசு ஆட்சியே தேவன் வகுத்த ஆட்சிமுறை என்றோ, பொதுவுடைமைக் கொள்கையே தருமத்தில் சிறந்தது என்றோ, அல்லது வியாபாரத்தில் உத்தமமான முறை எது என்றோ அவர் கூறவில்லை. **காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அரசியல் மற்றும் ஆட்சி முறைகள் மாறுவது அவசியம்.** ஆகையால் இயேசு கிறிஸ்து அரசியல் முறைகளையும் நுட்பமான திட்டங்களையும் பற்றி விவரித்துப் பேசாமல் தேவனின் ஆட்சியை விரும்பும் மக்களுக்கு எவ்வித நோக்கமும் மனப்பான்மையும் நீதிநெறிக்குரிய குணங்களும் இருக்க வேண்டுமென்பதைத் தம்முடைய உபதேசத்திலும் ஊழியத்திலும் காண்பித்தார். உயிர்த்தெழுதலுக்குப் பின்னும் தம்மைப் பின்பற்றி வந்த நண்பரோடு பேசுகையில் தேவனின் ராஜ்ஜியத்யைப் பற்றி மேலும் அதிகமாக அவர்களோடு பேசினாரென்று வேதத்தில் காணலாம்.

நம் ஆண்டவர் தேவனுடைய ராஜ்ஜியத்தை குறித்து சொல்லும்போது அரசாட்சி, அதிகாரத்தை பற்றி பேசாமல் தனிமனித மாற்றத்தை எதிர்கொண்டே தன்னுடைய கருத்தை விதைப்பதை நாம் அறியலாம். தனி மனித மாற்றத்தின் மூலம் சமூக சீர்திருத்தத்தை ஏற்படுத்த நம் ஆண்டவர் விளைகிறார். நம் ஆண்டவரின் கொள்கையில் அடிப்படையில் சீர்திருத்தப்பட்ட சமுகமே தேவனின் ராஜ்ஜியம் என்பதை அறியலாம்.

**அத்தியாயம் 2**

# ஆதித்திருச்சபையும் அரசியலும்

## இராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுங்கள்

ஆதித்திருச்சபையின் வரலாற்றை கண்ணோக்கி பார்த்தால் அவர்கள் அரசியலை பற்றி அவ்வளவாக சிந்தனை செய்யவில்லை என்பதை அறியலாம்.ராயனுடையத்தை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் என்று கிறிஸ்துவானவர் கூறியபோது, அதற்குள் முரண்பாடு இருப்பதாக மக்கள் எண்ணவில்லை.ரோம அதிகாரி கிறிஸ்துவை சிலுவையில் அறைய ஒப்பு கொடுத்தபோது, அவன் யூதருடைய தூண்டுதலினால் அப்படி செய்தான் என்றே நினைத்து **அரசியல் நெறி தவறிவிட்டது என்றே நினைத்தனர். ஆனால் அரசியல் அமைப்பே தவறு என்று அவர்கள் உணரவில்லை.** பவுல் அப்போஸ்தலனும் அதிகாரிகளுக்கு கீழ்படியும்படியே தனது நிருபத்தில் எழுதுகிறார்.

ஆண்டவராகிய கிறிஸ்து சீக்கிரம் வருவார் என்றும், அந்த சமயத்தில் அரசியல் அமைப்புகள் நீங்கிவிடும் என்றும், அப்போது இருந்த அரசியல், அரசாங்கங்கள் தீமை செய்பவர்களை தண்டிக்கும் ஒரு பட்டயம் என்றே நினைத்திருந்தனர். அரசியல், ஆட்சி என்பவை சமுதாயத்தில் ஓர் சிறு பகுதி என்றே நினைத்தனர் என்பதை நாம் வரலாற்றின் மூலம் உணரலாம். அந்த காலத்தில் இருந்த அரசியல் எனும் பகுதி மனிதனின் ஆன்மீக வாழ்வை பாதிக்கவில்லை என்றும், முழுதாக இல்லா விட்டாலும் ஓரளவு அது அற நெறியை காப்பாற்ற பயன்படுகிறது என்றும் எண்ணி அரசியலை பற்றி கவலையும், பயமும்,சந்தேகமும் இல்லாமல் இருந்தனர். அனால் கிறிஸ்தவர்களே அரசியல் பொறுப்பில் நின்று ஆட்சி எடுத்து நடத்தும் காலம் வரும் என்ற எண்ணம் அவர்கள் கனவிலும் இல்லை.

முதலாம் நூற்றாண்டிலேயே அவர்களின் அரசியல் தொடர்பான எண்ணங்கள் மாறியது. கிறிஸ்தவம் வேகமாக பரவ ஆரபித்தது. ரோம மண்ணில் கிறிஸ்தவத்தை ஏற்று கொண்ட மக்களால் அரசாங்கம்

கவிழ்ந்து விடுமோ என்ற பயம் ரோம அரசியல் வட்டத்தில் வந்தவுடன், ஒடுக்கமும், பகையும் தொடங்கியது. ஆந்த காலகட்டத்தில் திருச்சபை எதிர்த்து குரல் கொடுக்கவோ அல்லது அரசியலில் ஈடுபடவோ வாய்ப்புகள் இல்லாமல் போனது. தைரியத்துடனும், நம்பிக்கையுடனும், பொறுமையுடனும் ரோம சித்தரவதைகளை ஏற்றுகொள்வது கடமை என்று பல கிறிஸ்தவர்கள் இரத்த சாட்சிகளாக மரித்தனர்.

ரோம அரசாங்கத்தில் ராயனுடைய சிலைகளை வணங்க கட்டாயபடுத்தும் போது தான் ராயனுக்கு கொடுப்பதும், தேவனுக்கு கொடுப்பதும் எந்த அளவுக்கு மோதக்கூடும் என்பதை உணர்ந்தனர். ஆன்மீகமும், அரசியலும் கலந்து தான் வாழ்க்கை என்பதை அவர்கள் உணர்ந்தனர். ராயனுடைய ஆட்சி தேவனுடைய ஆட்சிக்கு எதிராக இருப்பதை உணர்ந்தவர்கள் அந்த ஆட்சி முடிய வேண்டும் என்று எண்ணினர். இதை நாம் வெளிபடுத்தின விஷேசத்தில் பாபிலோன் என்று வெறுப்புடன் குறிப்பிடபட்டிருப்பதில் இருந்து அறியாலாம்.

காலம் மாறியது. அரசியல் இன்றி ஒடுக்கப்பட்டு வாழ்ந்த மக்கள், அரசியல் சிம்மாசனத்தில் அமர்ந்தனர். அந்த சமயத்தில் கிறிஸ் துவின் அரசியல் கொள்கைகளை, இயேசுவின் அரசாங்கத்தை வழி மொழிய வாய்ப்பு கிடைத்தது. ஆனால் பதவி ஆசையாலும், தவறான அரசியல் கொள்கைகளாலும் அது வழிமாறி சென்றது. அரசியலில் கிறிஸ்தவ சமுதாயம் வேறுபட்டு நிலைத்து நிற்காமல், பிற அரசியல் போல வேறுபாடு இல்லாமல் கரைந்து போனது. இதிலிருந்தே கிறிஸ் துவுக்கும், கிறிஸ்தவ அரசியலுக்கும் இங்கு வேலையும் தேவையும் உள்ளது என்பதை அறியலாம்.

# அரசியலின் அவசியம்

## நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்

**"என் இராஜ்யம் இவ்வுலகத்துக்குரியதல்ல"** என்று சொன்ன கிறிஸ்துவைப் பின்பற்றும் மக்களுக்கு இவ்வுலக அரசியலில் பங்குண்டா?

பெரும்பாலான கிறிஸ்தவ மக்கள் இல்லை என்று தான் சாதிப்பார்கள். புதிய ஏற்பாட்டின் சில பகுதிகளும் ஆதிக்கிறிஸ்தவர்கள் நடந்து கொண்ட விதமும் இக்கோட்பாட்டை ஆதரிப்பது போல் நமக்கு தோன்றும். ஆனால் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்வோமென்றால் கிறிஸ் துவின் போதனைகளும், சாதனைகளும் தேவனின் திருவுளத்தைப் பற்றி வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள உண்மைகளும் அரசியலில் கிறிஸ்தவர்களுக்குப் பொறுப்புண்டு என்பதை உணர்த்துகின்றன.
சமுதாயத்தில் பலர், சமுதாயப் பொறுப்பு வேறு, அரசியல் பொறுப்பு வேறு என்றும், சமுதாயச் சேவையே கிறிஸ்தவரின் கடமை யென்றும், அரசியல் பிரச்சனைகள் அவர்களுக்குரியவையல்ல வென்றும் எண்ணக்கூடும். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதோடு அனாதை இல்லங்களையோ, மருத்துவ சாலைகளையோ ஏற்படுத்தினால் அதுவே கிறிஸ்தவ அன்புக்குப் போதும் என்று சிலர் கருதலாம்.

ஆனால், சமுதாயத்தில் பின்தங்கி இருப்பவரின் முன்னேற்றத்திற்காக மட்டும் முயற்சி எடுத்துக் கொள்ளாமல் நாட்டின் பொது சமுதாய நிலை முன்னேறவேண்டும் என்பதும், அதற்கென்று உழைப்பதும், வாழ்வதும் கிறிஸ்தவ மக்களின் கடமை என்னும் உணர்ச்சி அவரிடையே வளர வேண்டும்.

உலகத்தின் எந்த தேசத்திலும் அரசியல் நிலை சீராக பொருந்தியிருக்குமானால் மட்டுமே, சமுதாய நிலை சீர்ப்படவும் வளர்ச்சியடையவும் கூடும் என்பது தற்காலத்தில் நாம் அறிந்து

கொண்ட சரித்திர அனுபவம். இக்காரணத்தினால் தான் இந்நாட்களில் உலகின் பல இடங்களிலும் அரசியல் புரட்சிகளும், மாறுதல்களும் தோன்றுகின்றன. பதவிக்கு வர வேண்டுமென்ற எண்ணத்துடன் ஓரளவுக்கு, இப்புரட்சிகள் சிற்சில கட்சியினரால் தூண்டிவிடப்பட்டாலும், அடிப்படையில் பெரும்பாலும் சமுதாயத்தின் நலத்திற்கு அவைகள் தேவை, அவசியம் என்ற எண்ணத்தினாலேயே ஆரம்பிக்கப்படுகின்றன என்பது நமக்கு தெளிவு. ஆகவே சமுதாய முன்னேற்றத்தை நாடுபவர்கள் அரசியல் துறையிலும் அவ்வித முன்னேற்றத்தைக்கொண்டு வரக்கூடிய அரசாங்கமும் அரசியல் முறைகளும் ஏற்படும்படியாகவும் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பொதுவாகக் கிறிஸ்தவர்கள் அரசியலைப் பற்றி அதிகமாக சிந்தனை செய்யாதிருப்பதற்குக் காரணங்கள் பலவுள்ளன. அவைகளிலொன்று **அரசியல் துறையில் ஏமாற்றம், பொய், சூழ்ச்சிகள் அதிகமாகத் தோன்றுவதால், அவைகளால் கிறிஸ்தவர் தங்களையே கறைப்படுத்திக் கொள்வோமோ என்ற எண்ணம்.** ஆனால் வேதாகமம் முழுவதிலும் பார்த்தால், இயேசுநாதரின் போதனையிலும் அவரை பின்பற்றுகிறவர்கள் உலகத்தினின்று பிரிந்து வாழாமல் உலகத்திற்கு வெளிச்சமாகவும், உப்பாகவும் வாழ்ந்து, சமுதாய நிலையைத் தூய்மையும், நேர்மையும் பொருந்தியதாக்கும்படியாக அழைக்கப்பட்டுள்ளனர் என்ற கடமை உண்டு என்பதை காணலாம்.

அரசியலில் கிறிஸ்தவர்கள் ஈடுபடுவதற்குத் தடையாயுள்ள மற்றொரு காரணம், இரட்சிப்பின் வழியை மற்றவர்களுக்கும் போதிப்பதே அவர்களுடைய பெரிதான பொறுப்பென்றும், மற்ற வழிகளில் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டால் அது சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் வழியை பாதிக்கும் என்றும் பலர் கொண்டுள்ள எண்ணம். ஆனால் இந்த எண்ணம் இயேசுநாதரின் சிந்தையையும் இரட்சிப்பின் தன்மையையும் சரிவர அறிந்து கொள்ளாததாலேயே எழுகின்றது என்று கூறலாம். கிறிஸ்துவின் போதனையிலாவது வேதாகமத்திலாவது மனிதனுடைய ஆள் தத்துவத்தைப் பிரித்து ஆன்மா மட்டுமே கடவுளுக்குரியதென்றும், பாராட்டத்தக்கதென்றும், சரீரமும் சமுதாய வாழ்க்கையும் அற்பமானவையென்றும் கூறப்படவில்லை. இஸ்ரவேலரை தெரிந்து கொண்ட தேவன் அவர்களுடய ஆத்மீக வாழ்க்கையும் சமுதாய வாழ்க்கையும் ஒன்றாக இசைந்திருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆகையால் சமுதாய விதிகளும் பத்துக் கற்பனை போன்றவைகளும் இஸ்ரவேலரின் சட்டங்களில் அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் சரித்திரமும், இலக்கியமும்

வேதத்தினின்று வேறுபட்டவை என்று அவர்கள் எண்ணவில்லை. விவிலிய நூலின் முதற்பாகத்தில் சுகாதார விதிகளும், விஞ்ஞானக் கருத்துக்களும், சமுதாயக் கொள்கைகளும், தத்துவ சித்தாந்தங்களும் ஒன்றோடொன்று பின்னிக் கிடப்பதை நாம் பார்க்கலாம். மனிதனுடைய முழு வாழ்க்கையும் தேவனின் அமைப்பிற்கும், ஆட்சிக்கும் உட்பட்டதென்பதும், அவனுடைய தினசரி வாழ்க்கையே அவனுடைய ஆத்தும நிலையைக் காட்டுகின்றதென்பதும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட போதனை. உதாரணமாக, ஏசாயா, மீகா போன்ற தீர்க்கதரிசிகள் **மக்களுடைய ஆத்தும நிலையைக் கணிக்கும்போது சமுதாயத்தில் அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை அளவு கோலாக உபயோகித்தனர்.** பணக்காரர்கள் பாமர மக்களை ஒடுக்குவதையும் மற்ற பல சமுதாய அநீதி முறைகளையும் அவர்கள் கண்டித்துச் சமுதாயத்தின் அங்கத்தினர் யாவரும் சுகமாக வாழ்வதே கர்த்தரின் விருப்பம் என்று விளக்கிக் காட்டினர்.

அரசியல் திட்டங்களும், இதர நாடுகளுடன் செய்யும் ஒப்பந்தங்களும் தேவன் தங்கள் சமுதாயத்திற்குக் கொடுத்த பொறுப்பையும், மார்க்க விதிகளையும் சார்ந்தனவாய் இருக்க வேண்டுமென்றும் கற்பித்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக மேசியா என்ற ஒருவர் தோன்றுவாரென்றும் அவர் மூலமாகக் கர்த்தரின் ஆட்சி ஏற்படுத்தப்படும் என்றும், அந்த ஆட்சியில் எங்கும் சமாதானமும், நல்லொழுக்கமும் நிலவுமென்றும் எதிர் நோக்கி, மக்கள் அவ்வித ஆட்சிக்கு ஆயத்தப்படும்படியாக அவர்களை உற்சாகப்படுத்தினர்.

# கிறிஸ்தவர்களின் சேவை

## பார்வையடைகிறார்கள், நடக்கிறார்கள், சுத்தமாகிறார்கள், சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை விட்டு பரலோகத்திற்கு சென்றபின்பு அவருடைய சீஷர்கள் அவருடைய வார்த்தைகளை முழுவதுமாக புரிந்து கொள்ளாமல் அவர் சில வருடங்களுக்குள் திரும்பவும் உலகத்திற்கு வந்து விடுவாரென்றும், அச்சமயம் இவ்வுலக நிலையே முடிவுக்கு வந்துவிடுமென்றும் எண்ணினர். இந்த காரணத்தினாலே ஆதிக் கிறிஸ்தவர்கள் பலர், தங்களின் சமுதாய நிலையைப் பற்றித் தாங்கள் கவலைகொள்ள அவசியமில்லை என்ற மனப்பான்மையை கொண்டிருந்தனர். உதாரணமாக, கிறிஸ் தவத் தொண்டு புரிய வேண்டுமென்று விரும்பியவர்கள் விவாகம் செய்துகொள்ளுவது நலமா என்ற கேள்வி எழும்பிய நேரத்தில் அப்போஸ்தலராகிய பவுல், இவ்வுலக அமைப்பே மாறும் காலம் சமீபமாயிருப்பதால் விவாகம் செய்தவர்களுங்கூட இவ்வுலக வாழ்க்கையில் முற்றுமாக ஈடுபடாதிருப்பது நலம் என்ற கருத்தைத் தெரிவித்தார். அவ்வாறே பல நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவர்கள் இவ்வுலக முடிவையே எதிர்பார்த்து இருந்தபடியால் இவ்வுலகத்தின் சமுதாய அமைப்பும், நிலையும் மாற வேண்டும் என்றும், அவ்வித மாற்றத்தைக் கொண்டு வருவதற்குத் தங்களுக்கு கடமையும், பொறுப்பும் உண்டென்றும் உணராமல் போனார்கள். ஆனால் இந்த மனப்பான்மை உண்டாயிருந்த காலத்திலும் கிறிஸ்தவ மக்களுக்குச் சமுதாயச் சேவை புரிய வேண்டுமென்ற புரிதல் இல்லாமல் இல்லை.

மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளில் சமுதாயத்தை விட்டு விலகி துறவு மேற்கொண்டு மடங்களிலே வசிக்க வேண்டுமென்றெண்ணிய துறவிகளும் கூட நாட்கள் செல்ல செல்ல சமுதாயத்தொண்டு புரிய முன்வந்தனர். வைத்திய சாலைகள், அனாதை விடுதிகள் போன்றவைகள் உருவாகின. ஆறாம் நூற்றாண்டிலிருந்து

ரோம ஆட்சியின் எல்லைக்குள்ளிருக்கும் சபைகளிலிருந்து ஐரோப்பாக் கண்டத்திலுள்ள இதர நாடுகளுக்குச் சுவிசேஷ ஊழியர்கள் பலர் அனுப்பப்பட்டனர். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆசியாக் கண்டத்திலுள்ள இந்தியா, சீனா போன்ற நாடுகளுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக பலர் ஊழியர்களாக புறப்பட்டுச் சென்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சிறப்பாக **சுவிசேஷ ஊழிய மலர்ச்சிக் காலம்** என்று கூறலாம். ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களிலிருந்து உலகத்தின் பல பாகங்களுக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கும்படியாக ஊழியர்களைத் தெரிந்து கொண்டு, ஆதரவு கொடுத்து அனுப்பும்படியாக பல சங்கங்கள் நிறுவப்பட்டன. அவர்கள் சென்ற இடங்கள் பலவற்றில் மக்கள் நாகரிகமில்லாமல், படிப்பறிவு அற்று பிற்போக்கான நிலையில் இருந்தனர். அம்மக்கள் கல்வி கற்கவும், அறிவில் வளரவும், நாகரிகமான வாழ்க்கை நடத்தவும் அவர்களிடம் அனுப்பப்பட்ட சுவிசேஷ ஊழியர்கள் தங்கள் பணிகளை செய்தனர்.

பல நூற்றாண்டுகளாக நாகரிகம் அற்ற நாடுகளில், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், சமுதாயத்தில் தகுந்த பராமரிப்பில்லாத அனாதைகள், கண் பார்வையற்றோர், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியோர், மாற்று திறனாளிகள் முதலியோர் நலனுக்காகப் பள்ளிகளையும், மருத்துவ நிலையங்களையும் பல வசதிகளையும் அமைத்து, மக்கள் தங்கள் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும்படியாகப் பணியாற்றினர். மற்றும் சமுதாயத்தில் வளர்ந்து, வளர்த்து வந்த, பல தீய, மூட பழக்கவழக்கங்களை மக்கள் விட்டுவிடுவதற்கும் சீர்திருத்தங்கள் நடைபெறுவதற்கும் அச்சுவிசேஷ ஊழியர் தூண்டு கோலாக இருந்தனர்.

# கிறிஸ்தவ அரசியல்

## யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்

தங்களுடைய நாடுகளிலும் பிற நாடுகளிலும் சமுதாயச் சேவையிலும் சீர்திருத்த வேலையிலும் கிறிஸ்தவர்கள் உற்சாகமுள்ளவர்களாய் இருந்தாலும் பொதுவாக, சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்பில் மாற்றம் வேண்டும் என்றும், மாற்றுவது அவசியம் என்றும் அவர்கள் பல நூற்றாண்டுகளாக உணரவில்லை. சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளும், பொருளாதார நிலையில் நிறைவும், குறைவும் மக்களின் சுதந்திரமும் அடிமைத்தனமும் இயற்கையிலே அமைந்தது அல்லது தேவனின் சித்தத்தின்படி அமைந்தவை என்றும், அவற்றை மாற்றத் துணிவது தேவையற்ற செயல் என்று எண்ணி வந்தனர். ஓரளவுக்குப் பொருளாதாரத் துறையில் சமத்துவத்தை நிலை நாட்டும்படி விரும்பிய கட்சியினரையும், அரசியல் முறைகளில் மாற்றத் துணிபவரையும் ஏற்று கொள்ளாமல் ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிலையை நீடிக்கச் செய்ய முயற்சித்த கட்சிகளையே ஆதரித்தனர்.

நமது நாட்டிலும் ஆங்கிலேயர் ஆட்சி செய்து வந்த காலத்தில் அந்த ஆட்சியே நம் நாட்டின் நல் வாழ்வுக்கு காரணம் என்ற எண்ணத்துடன் கிறிஸ்தவர் பலர் இந்திய சுதந்திர போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லை. அதோடு அவர்களுக்குள் கிறிஸ் தவ சமுதாயம் வேறு, கிறிஸ்தவரல்லாதோருடைய சமுதாயம் வேறு என்ற பிரிவினை மனப்பான்மையும் காணப்பட்டது. இதன் காரணமாக நாடு சுதந்திரமடையும் நேரத்திலும் இந்தியக் கிறிஸ் தவர் பலர் தங்களுக்கு அரசியலில் தனி வாக்காளர் தொகுதிகளும், பிரதிநிதித்துவமும் வேண்டும் என்றும், அரசாங்க வேலைகளில் தங்களுக்குத் தனியாக இடங்கள் கொடுக்கப்படவேண்டுமென்றும் ஆசைப்பட்டனர். ஆனால் **அசரியா அத்தியட்சர், கே. டி. பால்** போன்ற

கிறிஸ்தவத் தலைவர்கள் இவ்வித மனப்பான்மை தவறு என்று காண்பித்து கிறிஸ்தவ மக்கள் அரசியலிலும், சமுதாயத்திலும் இந்திய மக்களாக பிற மக்களோடு பங்கு பெற வேண்டுமென்று கற்பித்தனர். அதோடு நாட்டின் முன்னேற்றத்திற்கான நலத் திட்டங்களில் கிறிஸ்தவர்கள் ஆர்வம் காட்ட வேண்டுமென்றும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகப் பணியாற்ற வேண்டுமென்றும் பல தலைவர்களும் ஆராய்ச்சியாளர்களும் கிறிஸ்தவருக்குள் ஒரு புத்துணர்ச்சியை உருவாக்க வேண்டும் என்றும் கூறினர்.

கிறிஸ்தவர்கள் தங்களுக்குக் கிறிஸ்தவர்களாக ஏற்படும் குறைகளையும், அநீதிகளையும் அகற்றுவதற்காக, குறிப்பாகத் தங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், ஏழைகளுக்கும் சலுகைகள் கிடைப்பதற்காக, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படும் சுதந்திரமும் உரிமைகளும் தங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவது தவறு அல்ல. ஆனால் கிறிஸ் தவர்கள் அரசியலில் தனித் தொகுதியாகப் பிரிந்து நிற்க வேண்டும் என்பதோ, கிறிஸ்தவ வேட்பாளர்களை கிறிஸ்தவர்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்பதோ, அல்லது அரசாங்க பதவிகளிலும், அலுவலகங்களிலும், அமைச்சர் குழுவிலும், அரசியல் சபைகளிலும் கிறிஸ்தவர்களுக்கு தனி இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று நினைப்பதும் தவறாகும். குடியரசு நாட்டிலே ஒரு மதத்தையோ, கலாச்சாரத்தையோ சேர்ந்தவர்கள் தனி வகுப்பாக, தனிப்பட்ட முறையில் வாழ வேண்டுமென்று விரும்பினால் அது நாட்டில் ஒற்றுமையையும் சகோதரத்துவத்தையும் பாதிக்கும்.

சமுதாயத்திலும், நாட்டிலும் சகோதரத்துவமும் ஒற்றுமையும் வளரச் செய்வதே கிறிஸ்தவரின் கடமை. எனவே, கடந்த காலத்தில் பிரிவு மனப்பான்மை இருந்தாலும், அவர்கள் அதை முற்றிலும் அகற்றி நாட்டின் மக்கள் யாவரோடும் ஒரே சமுதாயமாக வாழ்ந்து ஒத்துழைப்பதையே சமுதாயத்திலும் அரசியலிலும் தங்களுடைய நோக்கமாகக் கொள்ள வேண்டும். அதோடு சமுதாயத்திலுள்ள கேடுகளும், சீர்கேடான முறைகளும் நீங்கும்படியாக முயற்சி செய்வதும் சமுதாயத்தின் உயரிய இலட்சியங்களை அடைவதற்கு உதவக்கூடிய ஆராய்ச்சிகள் செய்வதும், முற்போக்கு எண்ணங்களை பிரதிபலிப்பதும் அவர்கள் நாட்டிற்குப் புரிய வேண்டிய இன்றியமையாத சேவையாகும்.

இது வரை கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும் நாட்டில் பிற்போக்கான மக்களுக்கும் பராமரிப்பில்லாத அல்லது மாற்று திறனாளிகள் பலருக்கும், குறிப்பாகச் தங்களுள்ளே உருவாக்கி

கொண்ட சங்கங்களின் மூலமாகவும், கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் மூலமாகவும் தொண்டு பல செய்து வந்துள்ளனர். ஓரளவுக்குச் சமுதாயச் சீர்திருத்தங்களுக்கு அவர்கள் தூண்டுதலாகவும் இருந்தனர். கிறிஸ்தவர்களில் பலர் இந்த தொண்டுபணிகளை மட்டும் தொடர்ந்து செய்வது போதும் என்று, அரசியல் சமுதாய விவகாரங்களில் இதற்கு மேல் பங்கெடுத்துக்கொள்ளுவது அவசியமில்லை என்றும் எண்ணுகின்றனர். ஆனால் தற்காலத்தில் நம் நாட்டில் செயல்படுகிற திட்டங்களும், பயன் முறைகளும் பொது மக்கள் அவற்றில் பங்கு கொள்வதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. கிராம முன்னேற்றத் திட்டங்களிலும் (Community Development Blocks) கூட்டுறவு சங்கங்களிலும், பண்ணைகளிலும், பஞ்சாயத்து ஆட்சி முறையிலும் பெரும்பாலும் அந்தந்த எல்லையிலுள்ள மக்களே தீர்மானங்கள் செய்து, திட்டங்கள் வகுத்து, நிர்வாகத்தையும் நடத்துகின்றனர். இந்நிலையில் கிறிஸ்தவர்கள் இத்திட்டங்களை ஆதரித்துத் தங்கள் உண்மையான ஊழியத்தினாலும் சிந்தனையினாலும் நமது நாடு, சிறப்பான நாடாகத் மாற இத்திட்டங்களில் பங்கேற்று அவைகளில் ஊக்கம் காட்டுவது மிகவும் அவசியம்.

கடந்தகாலத்தில் இந்தியக் கிறிஸ்தவர்கள் அரசியலில் பங்கெடுத்துக்கொள்ளவில்லை என்று கூற முடியாது. அரசியல் சபைகளில் உறுப்பினராகவும் அமைச்சராகவும் பல அரசியல் குழுக்களின் அங்கத்தினராகவும் அவர்களில் பலர் செயலாற்றியுள்ளனர். அவ்வாறு அரசியல் துறையிலே பல வருடங்களைக் கழித்தவர்களில் **ராஜகுமாரி அமிர்தகவுரி, சக்கரை செட்டி** போன்ற ஒரு சிலர் தங்களுடைய கட்சிகளில் அல்லது குறிப்பிட்ட அரசியல் பிரச்சனைகளில், நாட்டிற்குச் சிறந்த முறைகளையும் திட்டங்களையும் விளக்கிக் காட்டினர். தற்காலத்தில் கிறிஸ்தவர்கள் அரசியலில் கலந்து கொள்வது மட்டுமல்லாமல் அரசியல் நிலை சீர்பெற்றிருப்பதும் தங்களுடைய பொறுப்பு என்று உணர வேண்டும். கடந்த காலத்தில் கிறிஸ்தவர்கள் எந்த முறையில் சமுதாயச் சீர்திருத்தங்களிலும் கல்வித் திட்டங்களிலும் தொண்டு பணிகளிலும் ஒரு சிறப்பான செல்வாக்குடன் செயலாற்றி இலட்சியங்களையும், தேவையான மாறுதல்களையும் உருவாக்கினார்களோ அதே முறையில் கிறிஸ்துவின் சிந்தையாலும் கருத்துக்களாலும் அவர்கள் அரசியல் துறையிலும் செயலாற்றக்கூடும்.

**அரசியல் என்பது மனித வாழ்க்கையிலும் சமுதாய இயக்கத்திலும் ஒரு அம்சமாக மட்டும் இருப்பது மட்டுமல்லாது இன்றைய உலகில் அது மற்றெல்லாப் விசயங்களை பாதிக்கிறதும் அவற்றின் நிலையைத்**

**தீர்மானிக்கிற ஓர் அம்சம் என்பதை உணர வேண்டும்.** உலகத்தின் பல பாகங்களிலும் அரசியல் புரட்சிகளும் போராட்டங்களும் நிகழ்கின்ற காலம் இது. உலகத்தின் வருங்கால நிலையும், நலனும், மக்களின் சுயாதீனமும், உயிர்வாழ்தலும் இவ்வரசியல் போராட்டங்களின் முடிவைச் சார்ந்துள்ளன. அவற்றில் ஈடுபடுபவர்களைப் பற்றிப் பத்திரிக்கைகளில், செய்திகளில், சமூக ஊடகங்களில் நாம் வாசிக்கும்போது பல கிறிஸ்தவப் பெயர்களைக் காண்கின்றோம். ஆனால் அந்தக் கிறிஸ்தவர்கள் பதவிக்காகவும், தங்கள் கட்சியின் வெற்றிக்காகவும் போராட்டத்தை நடத்துகிறார்களா? அல்லது கிறிஸ் தவர்களாகச் சில இலட்சியங்களைத் தங்கள் முன் வைத்து அவைகளை அடையும்படியாக முயற்சி செய்கிறார்களா? என்பது அவர்களுக்கும் நமக்கும் இடையே உள்ள முக்கியமான கேள்வி.

# கிறிஸ்தவ கொள்கை

## நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும்

கடந்த இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுகளில் சில அரசியல் இலட்சியங்கள் பொதுவாக எல்லா நாடுகளிகளிலும் எல்லாக் கட்சியினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. உதாரணமாக, குடிகளின் சுயாதீனம் அடிப்படை உரிமையாகக் கருதப்பட்டு வந்தது. ஆனால் தற்காலத்தில் அந்த இலட்சியங்களைக் குறித்தே கருத்து வேறுபாடுகளும் மோதல்களும் ஏற்படுகின்றன. இந்நிலையில் மனிதனுடைய அடிப்படைத் தன்மையும் அவனுடைய வாழ்க்கையின் அர்த்தமும் என்னவென்றும் அவற்றிற்குப் பொருந்திய இலட்சியங்கள் எவையென்றும் உலகத்திற்கு எடுத்துக் காட்டுவது திருச்சபைக்கும், கிறிஸ்தவத்திற்கும் ஒரு முக்கிய பொறுப்பு. மற்றவர்களுக்கு இவற்றை எடுத்துக் கூறுவதற்கு முன் கிறிஸ்தவமும், திருச்சபையும் இவற்றைக் குறித்து ஆராய்ச்சி செய்வது அவசியம். அரசியலுக்கும் கிறிஸ்துவே ஆண்டவரென்றால் அதில் அவருடைய சித்தமும், அவர் காட்டும் வழியும், கொடுக்கும் கொள்கைகளும் எவை என்பதை நன்கு அறிய முற்பட வேண்டும். குறிப்பாக அகில உலக திருச்சபைக் கழகத்தில் (World Council of Churches) இவ்வித ஆராய்ச்சி நடந்து வருகின்றது. அந்தக் கழகத்தின் மூலமாக உலகத்தின் பல பாகங்களிலுள்ள கிறிஸ் தவ சபைகளில், **சபை என்பது உலகத்தோடு இணைக்கப்பட்ட ஒன்று என்றும், கிறிஸ்து உலக நிகழ்ச்சிகளிலும் சமுதாயத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் சம்பந்தப்பட்டவரென்றும் ஒரு புத்துணர்ச்சி** பரவி வருகின்றது.

கிறிஸ்தவ சிந்தையில் முதலாவதாக ஒவ்வொரு தனி மனிதனும் **மனிதன்** என்ற முறையில் சிறப்புள்ளவன் என்பதும், அதனால் மனிதன் என்பவன் ஒரு கருவியாகவோ அல்லது இயந்திரம் போலவோ கருதப்படவோ, உபயோகிக்கப்படவோ கூடாது என்பதே

அடிப்படைக் கொள்கைகள். இதற்குச் சிறந்த ஆதாரம் கிறிஸ்துவின் வாழ்க்கையிலும், உவமைகளிலும், மரணத்திலும் காணலாம். கிறிஸ்து தம் ஊழியத்திலும், அன்பு செயல்களிலும் மனிதருக்குள் வேறுபாடு இல்லாமல் ''**சிறியரில்**'' ஒவ்வொருவரும் தேவனின் அன்பையும், பராமரிப்பையும் பெறத்தக்கவராக உண்டாக்கப்பட்டனர் என்பதை காண்பித்தார். அதோடு மனிதருக்குள் ஏற்படும் எல்லா உறவுகளிலும், விவகாரங்களிலும்நீதியும்,அறநெறியும்,அன்பும்இடம்பெறவேண்டும் என்றும் அவர் கற்பித்தார். தனி மனிதனின் உரிமைகளை மதிக்காமல் நாட்டின் அரசாங்கமே (State) எல்லா உரிமைகளையும் அதிகாரத்தையும் உடையதாக இருக்க வேண்டும் என்று கருதும் கொள்கை இந்த உபதேசத்திற்கு முற்றும் மாறானது. மேலும் மானிட வாழ்க்கைக்குப் பொருளாதாரமே அடிப்படையென்றும், அறநெறி என்பது ஒரு கனவு என்றும் எண்ணுவது இயேசு கிறிஸ்துவின் மனப்பான்மைக்கும், அவரால் கொடுக்கப்பட்ட மனித வாழ்க்கையின் தத்துவத்திற்கும் முரண்பாடானது. ஆனாலும் உலகத்தில் பல நாடுகளில் அரசியலானது மனிதனைக் கருவியென்றும், உலக சரித்திரத்தில் நிகழும் சம்பவங்கள் மனிதனுடைய சுயாதீன சித்தத்தினால் உண்டானவைகள் அல்ல என்றும், உலகத்தில் வல்லமையுள்ள சத்துவம் பொருளேயென்றும், ஆத்துமா என்று ஒன்று இல்லை என்று என்னும் என்னத்திற்கு வித்திடுகிறது. இவ்வித எண்ணத்தை அது பல வழிகளில் மக்களுக்குள் புகுத்தியும் வருகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் மனிதனைக் குறித்த கிறிஸ்தவ தத்துவமே உண்மை என்றும், சமுதாயம் அவ்வுண்மையின் மேல் கட்டப்பட்டால் மட்டுமே சீர்நிலையுடன் இருக்க முடியும் என்று கருதும் அனைவரும் அவ்வுண்மையை உலகிற்கு எடுத்துரைப்பது அவர்களின் பெரும் கடமையும், பொறுப்பாகும்.

கிறிஸ்தவ சித்தாந்தத்தின்படி, மனிதன் தேவனால் படைக்கப்பட்டான். அவ்வாறு படைக்கப்பட்டதால் அவனுடைய தன்மையும் வாழ்க்கையின் குறிக்கோளும் தேவனால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஏனைய உயிர்ப் பிராணிகளைப்போல மனிதனும் உணர்ச்சிகளும் எழுச்சிகளும் உடையவன். அதே சமயத்தில் அவனுக்குப் பகுத்தறிவும் சிந்தனை சக்தியும் தேவனை அறிந்து கொள்ளும் ஆன்மீக உணர்ச்சியும் கொடுக்கப்பட்டுள்ளன. ஆகையால் மனிதனுடைய குறிக்கோளும், அவனுடைய சமுதாயத்தின் குறிக்கோளும் ஆள்தத்துவத்தை வளர்க்கிறவையாக இருக்க வேண்டும். மனிதனுடைய பொருளாதார அல்லது சரீரத் தேவைகளை மட்டும் திருப்தி செய்து அவனுடைய ஆன்மீக

வாஞ்சைகளையும், சுதந்திரத்தையும் மதிக்காமல், பிற்போக்கான கொள்கையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட எந்தக் கட்சியும், அரசியல் முறையும், அரசாங்கமும் கிறிஸ்தவ ஆதரவைப் பெறுவதற்குத் தகுதியுள்ளவையல்ல. ஏனென்னில் அவை கிறிஸ் துவில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்திற்கும், அறிவிற்கும் மாறாக அமைந்துள்ளன.

கிறிஸ்தவ சிந்தனையின்படி சமுதாயம் நீதியின் மேலும் அன்பின் மேலும் கட்டப்பட்டிருக்க வேண்டும். அன்பு இருந்தால் மட்டுமே மற்றவருக்கும் நீதி கிடைக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கும். மேலும் நீதி என்றால் பட்சபாதமின்மை மட்டுமல்ல, முன் சொல்லியபடி அது எல்லா மக்களும் நன்மை நிறைந்த வாழ்க்கை நடத்த வேண்டுமென்ற விருப்பமும் தீர்மானமுமாகும்.

'**நீதி என்பது மிகவும் அருமையும், விசாலமும், ஆழமுமாக இருப்பதினால் அதை ஒரு தனி மனிதனாவது. சித்தாந்தமாவது அல்லது கட்சியாவது முற்றிலுமாகக் கண்டு கொள்ள முடியாது. பல்வேறு உள்ளங்கள் சேர்ந்து ஆலோசிப்பதாலும் எதிர்மாறான கருத்துக்களை ஒப்பிட்டு அலசிப்பார்ப்பதினாலும் மட்டுமே நாம் அதன் முழுத்தன்மையையும் அர்த்தத்தையும் அறிந்து கொள்ளக்கூடும்**'. இக்காரணத்தால் தான் பிறரின் அபிப்பிராய காரணங்களுக்கு இடமளிக்கும் கட்சி முறையும் (party system). ''**தர்க்க அரசாங்க முறையும்**''(government by discussion) தேவைப்படுகின்றன.

அரசியல் நீதியையும் அறநெறியையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது, பாரம்பரியமாக நாம் அவைகளைக் குறித்த தவறான எண்ணங்களை கொண்டிருக்க கூடும் என்று நம்மையே நாம் எச்சரித்து சிந்தித்துக் கொள்வது நலம். மக்கள் அநீதியைச் செய்யும்பொழுது அநீதியாக நடந்து கொள்ள வேண்டுமென்று அப்படிச் செய்வதில்லை. அடிக்கடி தாங்கள் செய்கிறது அநீதியென்று அவர்கள் உணர்ந்து கொள்வதில்லை. உதாரணமாக, நம் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிமைகளை மறுத்து, அவர்களைத் தீண்டாத வகுப்பினர் என்று அநீதியான முறையில் சமுதாயத்திற்குப் புறம்பாகப் பிரித்து வைத்திருந்த காலத்தில் அது '**தர்ம**' த்தின் ஒரு அம்சமென்றே மற்ற வகுப்பினரும், அம்மக்களுமே கருதினர். சமீப காலத்தில்தான் இவ்வித சமுதாயப்பாகுபாடு அநீதியானது என்று நாம் அறிந்துள்ளோம். கிறிஸ் தவ நாடுகள் என்று அழைக்கப்பட்டுள்ள நாடுகளிலும், பல சமயங்களில் அரசியல், பொருளாதார, சமுதாய ஒழுங்குகளிலும் சட்டங்களிலும்கூட

அநீதி காணப்பட்டது. அடிமைகளைக் பணத்திற்கு கொள்ளுவதும், அடக்குமுறையும், ஏகாதிபத்தியமுறைகளும் நீதியானவை என்றே கருதப்பட்டன. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு முன்பு வரை தென் ஆப்பிரிக்காவில் அரசாங்கம் நடத்தும் வெள்ளையினர் அவர்களுடைய ஜாதிவேற்றுமைத் திட்டம் (apartheid) நீதியானதென்றும் அது தங்கள் ஆளுகைக்குட்பட்ட கருப்பு மனிதருடைய நலனுக்கு வழிகோலுமென்றும் கருதுகின்றனர். இன்றளவும் பெண்களுக்கு உடல் மற்றும் சுதந்திரம் சமந்தமான கருத்தில் பல அநீதிகள் சரி என்றே மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

மனிதனுடைய சீர்தூக்கும் திறனும், சமுதாய நீதியைப்பற்றி அவன் கொண்டுள்ள கருத்தும் எப்பொழுதும் நம்பப்படத்தக்கவை அல்ல, ஓரளவுக்கு அவை உண்மையாக இருந்தாலும் சில அம்சங்களில் அவை தவறானவைகளாகவும் இருக்கின்றன. மனிதன் நன்மையையும், தீமையையும் நினைக்கவும் செய்யவும் சுய சித்தமுள்ளவனாக இருக்கின்றான். அவனுடைய இயல்பில் நன்மை, தீமை என்ற இருவித பண்புகளும் அமைந்து இருக்கின்றன. எனவே, அவனுடைய சொல், செயல், சமுதாய பழக்க வழக்கங்கள், அரசியல் முறைகள், பொருளாதாரத் திட்டங்கள் இவை யாவற்றிலும் நன்மையும் தீமையும், உண்மையும் பொய்யும் கலந்தே காணப்படுகின்றன. இந்நிலையில் ஒரு கிறிஸ்தவன் அல்லது மனிதன் எவ்வாறு ஒரு அபிப்பிராயம் அல்லது இலட்சியம் அல்லது அதை அடைவதற்கான திட்டம், முற்றிலுமாக நீதியுள்ளதென்று எடுத்துக் கொள்ள முடியும்? தேவனுடைய உள்ளத்தைக்கொண்டும் அதனை வெளிப்படுத்தும் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனை ஆகியவற்றைக் கொண்டும் சிந்தித்து நடப்பதால் மட்டுமே நீதியுள்ளதென்று எடுத்துக் கொள்ள முடியும். **மனிதனுடைய எந்த முயற்சியும், நிர்வாகமும் உத்தம நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டாலும் நாளடைவில் மனிதனின் இயல்பான தீயபண்புகளினால் அவை நிலை தடுமாறி, தவறி தீமைக்குக் கருவிகளாக மாறக்கூடும்.** ஆகையால் எந்த நிர்வாகமும் திட்டமும் எவ்விதச் சிறந்த இலட்சியங்களுடன் நிறுவப்பட்டாலும் அடிக்கடி அவற்றைப்பரிசோதித்துப்பார்த்து அவை தேவனின் ஒளியால் நாம் காணும் நீதிக்கு வழியை உருவாக்குகிறதா என்று ஆராய்வது அவசியம்.

மனிதனுடைய இயல்பில் அமைந்துள்ள தீய பண்புகள் அவனுடைய எல்லா ஸ்தாபனங்களையும், முறைகளையும், திட்டங்களையும் நீதியற்றவையாக மாற்றக்கூடும். மற்றும் பதவியும் அதிகாரமும் மனிதனையும் அவனுடைய ஆட்சியையும்

முற்றுமாகக் கெடுக்கக்கூடும். உலக சரித்திரத்தில் மக்களின் நலனுக்காகப் போராட்டம் நடத்திய வீரர் பலர் ஆட்சிபுரியும் காலத்தில் சர்வாதிகாரிகளாக மாறி நன்மைக்கு பதிலாகத் தீமையைச் செய்ய முற்பட்டனர் என்பதை காண்கின்றோம். ஆகையால் எந்த சமுதாய அல்லது அரசியல் அமைப்பிலும் இவ்வித சர்வாதிகார முறைகள் உபயோகிக்கப்படுவதைத் தடுக்கக்கூடிய சட்டங்கள் அவசியம்.

# அரசியலில் நற்சாட்சி

## பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மனிதன் தன்னுடைய முயற்சியாலும், அறிவின் வளர்ச்சியாலுமே மேன்மையான ஒரு நிலையையும், அறிவிலும் நாகரிகத்திலும் நற்பண்புகளிலும் ஓர் உச்ச நிலையையும் அடையக்கூடுமென்று பல அறிஞர்கள் கருதி வந்தனர். ஆனால் ஏகாதிபத்தியத்தினால் உண்டான தீமைகளும். சர்வாதிகாரத்தால் நிகழ்ந்த பயங்கரச் செயல்களும், இரு உலக யுத்தங்களும் அந்த எண்ணத்தை முற்றிலும் தவறென்று காண்பித்தது. இன்றைய நாளில் உலக நிலையும், பல நாடுகளிலுள்ள அரசியல் நிலையும் மனிதரைக் கலங்க வைக்கின்றன. புதிது புதினான நோய்கள், அளவுக்கதிகமான அறிவியல் வளர்ச்சி போன்றவை நம்மை திக்குமுக்காக்குகின்றன. இந்த நிலையில் பலர் உலகத்தில் மனித சமுதாயமே அழிந்து விடுமோ என்று பயம் கொண்டுள்ளனர்.

அணுசக்தியினால் தயாரிக்கப்படும் ஆயுதங்களும், வல்லரசுகளின் மோதலும், நாடுகளில் ஏற்படும் புரட்சிகளும் குழப்பங்களும் வருங்காலத்தில் மனித சமுதாயம் யுத்தங்களையும், அழிவையுமே எதிர்பார்க்கக்கூடும் என்று எண்ண வழியை உண்டுபண்ணுகின்றன. சுயாதீனத்தையும், சமாதானத்தையும் பற்றிய நிச்சயம் முழுவதுமாகத் தகர்க்கப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில் உலகத்திற்கு ஏதாவது நம்பிக்கை உண்டா? இல்லையென்றால், கிறிஸ்தவர்கள் ஏன் அரசியல், சமுதாயத் துறைகளில் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்? எந்த விதமான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும்? அனைத்தும் அழிவிற்கு விரைந்து செல்லும்போது அரசியல் பொறுப்புணர்ச்சிக்கு அவசியமும் அர்த்தமும் உண்டா? இந்த கேள்விகளுக்கு ஒரு மனிதராக விடையளிப்பது

எவருக்கும் சாத்தியமல்ல என்றே கூறலாம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு விடை காணக்கூடிய ஒரே இடம் **இயேசு கிறிஸ்துவின் உள்ளம்** என்று சொல்வதே பதிலாகும்.

இயேசு கிறிஸ்துவின் உள்ளத்தில் அன்பைக் காண்கின்றோம். அவர் இந்த பூமியில் உதித்த தினத்தில் மனிதனுக்கு சமாதான வாழ்த்தும், தேவனுடைய திருச்சித்தமும் கூறப்பட்டதாக நாம் வேதத்தில் வாசிக்கின்றோம். அவர் மனிதனை மட்டுமல்ல, உலகம் அனைத்தையும் அன்புகூறுவதாக வேதம் நமக்குச் சொல்லுகிறது.

ஒரு காலத்தில் ஏன் இப்போது கூட கிறிஸ்தவர்கள் பலர் தேவன் இவ்வுலகத்தை அழிவிற்கே திட்டமிட்டிருப்பதாக எண்ணி வருகின்றனர். உலகமும் சமுதாயமும் அழிந்து போகும் என்று மக்கள் எதிர்பார்த்த சமயங்கள் பல. ஆனால் அவை அழிந்து போகவில்லை. கிறிஸ்தவ அனுபவமும் சிந்தனையும் வளர வளர, தேவன் உலக வரலாற்றை ஆளுகிறவர் என்ற எண்ணமும், அவர் இவ்வுலகத்தில் நீதியும், அன்பும், அறிவும் நிலவும் ஒரு சமுதாயம் தோன்ற வேண்டுமென்றே விரும்புகிறார் என்ற நிச்சயமும் வளர்ந்து வருகின்றன. வரலாற்றில் நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் தேவனுடைய செயல் இல்லை என்றோ, இவ்வுலகம் முடிவில்லாமல் நிலைத்திருக்கும் என்றோ சொல்வதற்குக் கிறிஸ்தவ சித்தாந்தத்தில் இடமில்லை. ஆனால் நமக்கு அவசியமானதும், இப்பொழுது தெளிவுபடுகிறதுமான உண்மை என்னவென்றால், கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவர்களல்லாத மக்கள் யாவரும் தங்களுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்ள வேண்டுமென்பதே.

**மக்களாக அரசியல் துறையிலும், மனிதனாகச் சமுதாயத்திலும், உழைப்பவனாக தொழில் துறையிலும், உறவாக குடும்பத்திலும், நன்மையைச் செய்து, பொது நலத்திற்காகச் சிந்தனையில் ஈடுபட்டுத் நாட்டின் நலத்திற்காக திட்டங்களிலும், முயற்சிகளிலும் கலந்து கொள்வது ஒவ்வொரு மனிதனுடைய முழுக்கடமை ஆகும்.**

உலகின் நம்பிக்கை இறைவனே. மனித அறிவும், இலட்சியங்களும், முயற்சிகளும், அவற்றைவிட சக்தியும் உறுதியுமுள்ள நிலையான தேவனின் சக்தியையும் அன்பையும் சார்ந்து நிற்கவில்லை என்றால் நிலைதடுமாறி, நன்மைக்குப் பதிலாகத் தீமையை கொடுக்கும்.

தேவனை போல அன்புடையவராகவும், இயேசு கிறிஸ்துவை போல உலக மக்களுக்காகப் பாடனுபவித்தும், சமுதாயத்திலும்

வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நீதியும் நேர்மையும் உள்ளவர்களாக இருக்க முயற்சி செய்கிறவர்களாகவாவது நாம் இருக்க வேண்டும். அதுவே இயேசு கிறிஸ்துவை பின்பற்றும் உண்மையான சீடர்களின் அடையாளமாகும்.

# அரசியல் எதிர்காலம்

## அரணைக் காத்துக்கொள், வழியைக் காவல்பண்ணு, அரையைக் கெட்டியாய்க் கட்டிக்கொள், உன் பெலனை மிகவும் ஸ்திரப்படுத்து

கிறிஸ்தவர்களாகிய நாம் அரசியல் இலட்சியங்களையும் அரசியல் முறைகளையும் நன்கு அறிய வேண்டும். இலக்குகள், இலட்சியங்கள் நன்மை தருபவையாக இருந்தால் அவற்றை ஆதரிக்க வேண்டும். நன்மையானவையாய் இல்லை என்றால் மற்ற மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் அதை உணர்த்த வேண்டும். சிறப்பாகத் தேர்தல் சமயங்களில் இவ்விதமாகப் பற்பல கட்சிகளின் அறிக்கைகளையும் கொள்கைகளையும் ஆராய்ச்சி செய்து பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வண்ணமாக அவற்றை விளக்கிக் காட்டி, அவற்றிலுள்ள நன்மைகளையும் குறைபாடுகளையும் எடுத்துக் கூறுவது நன்மையாக இருக்கும். மேலும், அரசியலின் குறிக்கோள் சிறந்ததாயிருப்பினும், அதனை அடைய உபயோகிக்கப்படும் முறைகளும், திட்டங்களும் தவறானவைகளாயிருக்கக்கூடும். அவற்றையும் கிறிஸ்தவர்கள் சீர்தூக்கி நன்மையையும் தீமையையும், பிரித்துக் காட்டுவது ஒரு சேவையாகும்.

அதே சமயத்தில் நாமும் மக்கள் என்பதை மனதில் கொண்டு, மக்களின் பொறுப்பையும், நல்நடத்தையையும், அறத்தையும் மற்ற மக்கள் அறிந்து கொள்ளத்தக்கதாக, நம்முடைய சமுதாய வாழ்க்கையில் பிறருக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும். நாட்டின் நலனுக்கென்று வகுக்கப்பட்ட திட்டங்கள் யாவற்றிலும் ஆர்வம் காட்டி அவை வெற்றியடையுமாறு செயலாற்றுவதும் நம்முடைய கடமையாகும். அத்துடன் சிறுபான்மையோருடைய உரிமைகள் மதிக்கப்படாத தருணங்களிலும், கட்சிகளிடையே எழுகின்ற சச்சரவுகளிலும், மொழி, இன வகுப்பு முதலிய சமுதாய அம்சங்களைப் பற்றி எழுகின்ற சண்டைகளிலும், அவர்கள் யாவருக்கும் ஒரே நீதி கிடைக்கும்படியாகவும், வகுப்புவாத சண்டைகள் நீங்கி

ஒற்றுமையுண்டாகும்படியாக பாடுபடுவது நமக்கு கொடுக்கப்பட்ட "**ஒப்புரவாக்குதலின் பணி**"யாகும். மக்களாக கட்சிகளுக்கு வெளியில் இருந்து கொண்டு ஓரளவுக்கே அரசியல் துறையில் பணியாற்றக்கூடும். ஆனால் கட்சிகளைச் சீர்ப்படுத்தி அவற்றிலுள்ள பகை, பதவி வேட்கை, சூழ்ச்சிகள் யாவற்றையும் நீக்கவேண்டுமென்று அல்லது குறைக்க வேண்டுமென்று விரும்பினால் கட்சிகளில் அங்கத்தினராவதும் அவற்றில் உழைப்போராவதும் அவசியம்.

இந்தியாவிலுள்ள பல அரசியல் கட்சிகளிலும், சங்கத்திலும் கிறிஸ்தவ அங்கத்தினர் வெகுசிலரே இருப்பர் என்பது என்னுடைய கணிப்பு. சிலர் தேர்தல்களில் கட்சிகளால் ஆதரிக்கப்பட்டுப் பதவிக்கு வரவேண்டுமென்ற நோக்கத்துடனேயே தேர்தலுக்குச் சற்று முன்னதாக அங்கத்தினராக ஆகியுள்ளனர். ஒரு சிலர் வெற்றியடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் கட்சியையும் மாற்றிக்கொள்ளுகின்றனர்.

ஆனால் வருங்காலத்தில் தம்தம் நலத்தையும் பதவியையும் குறிக்கோளாகக் கொள்ளாமல், நாட்டின் நலனுக்காகப் பெருமளவில் செயலாற்ற வேண்டும் என்றும், தாம் நலமென்று எண்ணுகிற கட்சி வலிமை பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் அக்கட்சியில் அங்கத்தினராவதும் அரசியலில் பங்கேற்கும் சேவையே. அப்படி அங்கத்தினராக சேர்வதின் பயனாக அக்கட்சிகளில் நேர்மையும் ஒழுக்கமும் வளர்ந்து வர அவர்கள் உழைக்கக்கூடும். கட்சியைத் தெரிந்துகொள்ளும் சமயத்திலும் அவைகளில் செயலாற்றும்போதும் மேற்கூறிய அடிப்படைக் கொள்கைகளை மனத்தில்கொண்டு அவற்றிற்கேற்றவாறு நடந்துகொள்ளுவதும் ஆலோசனை கொடுப்பதும் கிறிஸ்தவர்கள் நாட்டிற்குச் செய்யக்கூடிய சிறந்த கிறிஸ் தவ அரசியல் சேவையாகும்.